அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 29/2019

எனது இலக்கம் : EST-4/03/PMT/0253
பொது நிருவாக, அனர்த்த முகாமைத்துவ மற்றும்
கால்நடை அபிவிருத்தி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2019.09.18

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாணங்களின் பிரதம செயலாளர்கள்
திணைக்களங்களின் தலைவர்கள்
அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்டசபைத் தலைவர்கள

**தற்காலிய, அமய (நாளாந்த), பதில் கடமை, ஒப்பந்த அல்லது சலுகை அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்களுக்கான நிரந்த நியமனங்களை வழங்குதல**

2016.04.04 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 25/2014(ii) இன் மூலம் இரத்துச் செய்யப்பட்டுள்ள மேற்படி விடயம் மற்றும் அதனுடன் தொடர்புடையதாக பிரசுரிக்கப்பட்டுள்ள 2014.11.12 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 25/2014 மற்றும் 2014.12.29 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 25/2014 (i) இன் பால் தங்களது கவனத்துக்கு கொண்டு வருகின்றேன்.

02. மேற்படி 25/2014 மற்றும் 25/2014(i) இனைக் கொண்ட அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்திருக்க வேண்டிய திகதி 2019.09.01 ஆந் திகதியாகக் கருதி அத் திகதிக்கு தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள அலுவலர்கள் அத் திகதி முதல் இங்கு கீழே குறிப்பிட்டுள்ள i மற்றும் ii ஆம் நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டு நிரந்தப்படுத்துவதற்கு முடியுமான வகையில் அரசாங்க நிர்வாக சுற்றறிகை 25/2014 மற்றும் 25/2014 (i) களை மீள அமுல்நடாத்துவதற்கு 2019.09.17 ஆந் திகதியன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது முடிவெடுக்கப்பட்டுள்ளது.

i. மேற்படி நிரந்தர நியமனங்களை வழங்கியதன் பின்னர் ஓய்வூதிய பிரமாணக் குறிப்பின் கீழ் ஓய்வூதியம் பெறுவதற்காக முழுமைப்படுத்தியிருக்க வேண்டிய தேவைப்பாடுகளை பூர்த்தி செய்ய முடியுமான அலுவலர்களுக்காக நிரந்தர ஓய்வூதியத்துடன் கூடிய நியமனத்தை வழங்குதல்.

ii. மேற்கூறிய I இல் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளை பூர்த்தி செய்ய முடியாதுள்ள அலுவலர்களுக்கு அரச ஊழியர் சேமலாப நிதியத்தின் கீழ் நிரந்தர நியமனங்களை வழங்குதல்.

03. மேற்கூறிய பிரகாரம் நடைமுறைப்படுத்துவதற்கு குறித்த நியமன அதிகாரி செயற்படுதல் வேண்டும்.

04. இச் சுற்றறிக்கை பொதுத் திறைசேரியின் உடன்பாட்டுடன் வெளியிடப்பட்டுள்ளது.

ஒப்பம்./ ஜே.ஜே. ரத்னசிரி
செயலாளர்
பொது நிருவாக, அனர்த்த முகாமைத்துவ மற்றும்
கால்நடை அபிவிருத்தி அமைச்சு